**தலைப்பு – 151 கடற்றொழில் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் கடற்றொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 26ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான கடற்றொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்;

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்-பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

கடந்த ஆண்டு தொடர்பான நிதிநிலைக்கூற் தொடர்பாக என்னால் முன்வைத்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை.

| முன்னைய ஆண்டு தொடர்பான அறிக்கையின் பந்தியின் தொடர்பு | செயற்படுத்தப்பட்டிராத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தியின் தொடர்பு |
|---|---|---|
| **3.1.1(இ)** | கணக்காய்வுக்குத் தேவையான விபரம் சமர்ப்பிக்காமை | 1.6.1(உ) |

## 1.6 நிதிக் கூற்று தொடர்பான கருத்துக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான ஒப்பீட்டுக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரச அலுவலர்களுக்கான முற்பண ''பி'' கணக்கில் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் தொகை ரூபா 1,095,938 ஆக இருந்ததுடன், அந்த நிலுவையாக மீதியில் ரூபா 956,055ஆன நூற்றுக்கு 87 வீதம் 5 வருடங்களைக் கடந்தும் அந்த நிலுவையாக இருக்கும் கடன் மீதி மீளாய்வு வருடத்திலும் அறவிடுவதற்கும் அமைச்சு தவறிவிட்டது. | நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறிவிடுவது தொடர்பாக மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளதுடன், தற்போது கடனை அறவிடுவதற்கு சிரமமாக இருக்கும் கடன் மீதியை வெட்டி விடவும், அறவிடக்கூடிய கடன் மீதியை அறவிடுவதற்கும் இக்குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவிடுதல் வேண்டும். |
| (ii) | அரச அலுவலர்களுக்கான முற்பண ''பி'' கணக்கில் திறைசேரி புத்தகத்துக்கு அமைய வருடத்தின் பற்றுக்களின் மொத்தம் ரூபா 11,763,453 ஆகவும், திணைக்கள நிர்வாக கணக்கில் பற்றுக்களின் மொத்தம் ரூபா 11,625,453 ஆகவும் உள்ளன. ஒருங்கிணைந்த விரிவான மீதி சரிபார்ப்பில் ள்ள மொத்த பற்று ரூபா 8,863,593 ஆகவும், திறைசேரி புத்தகத்துக்கு அமைய மொத்த வரவுகள் மேற்கொள்ளும் போது மொத்தம் ரூபா 10,158,023 உம் திறைசேரி புத்தகத்துக்கு அமைய ரூபா 10,020,023 ஆகவும், மற்றும் ஒருங்கிணைந்த விரிவான மீதி சரிபார்ப்பில் வரவுகளின் மொத்தம் ரூபா 9,860,004 ஆகவும் மாற்றம் அவதானிக்கப்பட்டன. | சேவை நிலையத்திலிருந்து இடமாறி வந்த அலுவலர்களின் ரூபா 138,000 கடன் தொகை நிரவாக கணக்கில் வைப்பிட்டு அமைச்சின தலைப்பிக்கும் கடன் குறிப்பில் உள்ளடக்கப் பட்டுள்ளது. இந்த தவறு திருத்தப்பட்டாலும், நிர்வாக கணக்கில் உள்ளடக்கப் படாமையால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் கடற்றொழில் இராஜாங்க அமைச்சில் மற்றும் அமைச்சின் கணக்குக்கு இடையில் ஜேர்னல் மேற்கொள்ளும்போது கணக்கு அமைப்புகளில் ஏறபட்ட பிழை காரணமாக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. | திறைசேரி புத்தகத்துக்கு அமைய நிலுவைகள் அந்தந்த நிர்வாக கணக்கு மற்றும் நிலுவை சரிபார்ப்புக்கு சமமாக இருத்தல் வேண்டும். |

## (ஆ) வைப்பீடு

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நி.பி. 571(3)இன் பிரகாரம் கடற்றொழில் அமைச்சில் 2 வருடங்களுக்கு மேலாக மொத்த ரூபா 54,561,722 வைப்பீட்டு மீதி நிரப்புவதற்கு அல்லது அரச வருமானத்துக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடற்றொழில் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் வைப்பிடப்பட்ட வைப்பீடு தக்க வைத்த பணம் தொடர்பாக அந்த நிறுவனங்களிடமிருந்து அழைப்பு கோரப் பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதனை அரச வருமானத்தில் வரவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நி.பி. 571(3)இன் பிரகாரம் 2 வருடங்களுக்கு மேல் இருந்த வைப்பீட்டு மீதி நிரப்புவதற்கு அல்லது அரச வருமானத்துக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | “தல றல சவிய 2022” உலக கடற்றொழில் தினத்துக்காக பல நிறுவனங்களினால் கடற்றொழில் அமைச்சுக்கு ரூபா 3,250,000 நிதி உதவி வழங்கியிருந்ததுடன், அதில் ரூபா 2,741,648ஐ செலவிட்டு மீதி ரூபா 508,352 பணம் அரச வருமானத்துக்கு வரவிலடப்பட வில்லை. | இந்த வைப்பீடு தொடர்பாக மேலும் பரிசோதனை செய்து பொது வைப்பீட்டு கணக்கில் மீதித் தொகை அரச வருமானத்துக்கு வரவிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொது வைப்பீட்டு கணக்கில் இருந்த “தல றல சவிய 2022” உலக கடற்றொழில் தினத்துக்காக கிடைத்த தொகையில் மீதித் தொகையை அரச கணக்கில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும |
| (iii) | தக்க வைப்பு பண வைப்பு கணக்கின் ஒற்றை இருப்பு பட்டியல் மொத்தம் ரூபா 85,252,201 ஆக இருப்பதுடன் வருடாந்த நிதி முன்னேற்றம் ஏசீஏ (4) மாதிரியின் கீழ் இந்த வைப்புக் கணக்கு மீதி ரூபா 83,251,173 ஆக இருந்தது ரூபா 2,001,028 வித்தியாசம் இருந்தது. | தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இந்த நிறுவனத்துக்குரிய வைப்பீட்டாளர்களின் தகவலுக்கு அமைய இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன் இந்த தவறினை திருத்த நிறுவனத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | வைப்பீட்டு கணக்கின் மீதி மற்றும் தனிப்பட்ட இருப்பு பட்டியல் சமமாக இருத்தல் வேண்டும். |

**(இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசம்பர் 31ஆந் திகதிக்கு கடற்றொழில் அமைச்சுக்குரிய ரூபா 721,915,845 பெறுமதி கொண்ட நிதியல்லாத ஆதனம் தொடர்பான விபரமான அட்டவணை கணக்காய்வுக்கு வழங்கப்படவில்லை அத்துடன் நிலையான ஆதன கணக்கெடுப்பு அறிக்கையும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே இந்த ஆதனத்தை பரிசீலனை செய்வதற்கு அல்லது இந்த ஆதனம் பௌதீக ரீதியாக நிறுவனத்துக்குரியதா என்பதை பரிசீலனை மேற்கொள்ள முடியவில்லை. எனவே ரூபா 721,915,845 நிதியல்லாத ஆதனத்தை துல்லியமாக கணக்காய்வுக்கு உட்படுத்த முடியவில்லை. | 2022 திசம்பர் 31ஆந் திகதிக்கு உள்ள மொத்த ஆதனத்திற்குரிய விபரமான ஆவணம் அதிக பக்கங்களை கொண்டிருப்பதால் அதன் சுருக்க அட்டவணை மட்டும் அச்சிட்ட பக்கங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆதனம் தொடர்பான விபரமான அட்டவணையின் மென்நகல் கணக்காய்வுகப் பிரிவுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. | வருடாந்த ஆதன கணக்கெடுப்பு செய்யப்பட்ட அறிக்கை கணக்காய்வாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.. |

**(ஈ) அட்டவணை மற்றும் புத்தகங்கள் பராமரிப்பின்மை**

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | **மின் உபகரணங்கள் தொடர்பான பட்டியல்** | | |
| | நி.பி. 454(2)இன் பிரகாரம் மின் உபகரணங்கள் தொடர்பான பட்டியல் பராமரிக்கப்படாமை | பொருட் பதிவு புத்தக மொன்றை பராமரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரச கட்டிடங்களிலுள்ள அனைத்து மின் சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் பொருட் பதிவேடு பராமரித்தல் வேண்டும். |
| (ii) | **புத்தகங்களின் பெயர்ப் பட்டியல்** | | |
| | நி.பி. 454(3)இன் பிரகாரம் புத்தகங்களின் பெயர்ப் பட்டியல் பராமரிக்கப்படாமை. | புத்தகங்களின் பட்டியல் பராமரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெயர்ப் பட்டியல் பராமரித்தல் வேண்டும். |

(உ) கணக்காய்வு சான்று இல்லாமை.

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரதான விடயமாக அரசின் மூலம் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட கடற்றொழில் விடயங்களுக்கு மற்றும் கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களம் மற்றும் சட்டபூர்வ நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்குரிய கொள்கை, வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்கள் தயாரித்து செயற்படுத்தல், பின்விபரமிடல், மற்றும் மதிப்பீடு குறிப்பிடப் பட்டிருந்தாலும் அமைச்சின் கீழுள்ள தேசிய நீர்வாழின செய்கை அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம், இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கு மீளாய்வு வருடத்தில் ரூபா 1,753,907,569 வழங்கப்பட்டிருந்தாலும் அந்த நிறுவனங்கள் பற்றிய பின்விபரம் மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளப்பட வில்லை. | கட்டுநிதி விடுவிப்பு நேரடியாக திறைசேரியின் ஊடாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படும். இத்தகவல் கணக்காய்வு செய்வதற்குரிய புத்தகங்கள் அந்தந்த நிறுவனங்கள் பராமரிப்பதால் அந்த நிறுவனங்களின் கணக்காய்வின் மூலம் இந்த விடயங்களை உறுதிப்படுத்த முடியும். அமைச்சுக்கு அதன் சாராம்சத்தின் பகுதி மட்டும் கொண்டு வரப்படுகிறது. | அமைச்சின் கீழ் ஒழுங்குபடுத்தப்படும் இந்த 03 அரச நிறுவனங்களின் செயலாற்று பற்றிய பின்விபரம் அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | அலங்கார மீன், நன்னீர் மீன், இறால் செய்கையிடல் மற்றும் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி, பல்தின மீன்பிடி நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் மீளாய்வு வருடத்துக்குத் தேவையான கட்டுநிதி ரூபா 2,172,185,000 என்றாலும் திறைசேரியினால் ரூபா 371,137,000 விடுவிக்கப் பட்டமையால் கட்டுநிதி திட்டமிடலின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட ஏற்றுமதி சந்தை இலக்கை கொண்டு அலங்கார மீன் கைத்தொழிலுக்கு வசதிகளை மேம்படுத்தல், மூலோபாய திட்டங்கள் தயாரிப்பதன் மூலம் நாடளாவிய ரீதியில் உள்ள ஏரிகள், கடனீரேரி மற்றும் தரையிறக்கல் மீன்பிடி நடவடிக்கையை மேம்படுத்தல், பல்தின மீன்பிடி படகுகளுக்கு கடல் நீரைப் பயன்படுத்தி குளிர்பதன தொகுதியை மேம்படுத்தல் மற்றும் சூரிய சக்தியைப் பயன்படுத்தலை ஊக்குவித்தல், மீன்பிடித் துறைமுகம் மற்றும் நங்கூரமிடும் தளம், ஐஸ் தொழிற்சாலை, நவீன தகவல் பரிமாற்ற வசதிகளை மேம்படுத்தல், தேசிய நீர்வாழின செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மீனவ அமைப்புகளுக் கிடையே கடல் மற்றும் நன்னீர் மீன் குடித் தொகையை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை ஆரம்பித்தல், சூழுலுக்கு இணக்கமான உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மீன் அறுவடைய அதிகரித்தல் மற்றும் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களுக்கு தொழில் பயிற்சி வழங்கல் போன்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றாமை, அத்துடன் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு திட்டமிட்டவாறு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பொருளாதார நெருக்கடி காரணமாக வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களுக்கு கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது., இதன் காரணமாக இந்நாட்டின் மீன்பிடி கைத்தொழில் சார்ந்த திட்டங்களை திட்டமிட்டவாறு செயற்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டது. மேலும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இந்த நிலை மோசமாகியதுடன், அமைச்சின் கட்டுநிதியில் தேசிய நீர்வாழின செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் கோரப்பட்ட கட்டுநிதி திறைசேரியிலிருந்து கிடைக்காமையால் அபிவிருத்தி செயற்றிட்டங்-களுக்குரிய கட்டுநிதி கிடைக்காமையால் அபிவிருத்தி திட்டங்கள் திட்டமிட்டவாறு பயன்படுத்த முடியவில்லை. | அமைச்சின் அடிப்படை நோக்கத்தை முன்னெடுத்து செல்வதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டும். . |
| (ஆ) | கடற்றொழில் அமைச்சில் மீளாய்வு வருடத்துக்கு தேவையான கட்டுநிதி ரூபா 9,658,227,000 ஆக இருந்தாலும் திறைசேரியினால் ரூபா 2,228,832,931 வழங்கப் பட்டமையால் கட்டுநிதி திட்டமிட்டல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கரையோர பிரதேசங்களில் மீன் குடித் தொகையை அதிகரிப்பதறகு அறிவியல் முறைகள் அறிமுகம் செய்தல், | 2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களுக்கு கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக இந்நாட்டின் மீன்பிடி கைத்தொழில் சார்ந்த திட்டங்களை திட்டமிட்டவாறு செயற்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டது. மேலும் வருடத்தின் இரண்டாவது காலாண்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு | அமைச்சின் அடிப்படை நோக்கத்தை முன்னெடுத்து செல்வதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| சர்வதேச கடற் பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கையை விரிவுபடுத்த தேசிய நிறுவனங்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல், ரின் மீன் தொழிலை ஊக்குவிப்பதற்கு தனியார் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவித்தல், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கிடையில் நியாயமான வகையில் மீன் உற்பத்திக்கு விற்பனை அபிவிருத்தி நடவடிக்கையை விரிவுபடுத்தல், வடக்கு மற்றும் கிழக்கு கடற் பரப்பில் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையை கட்டுப்படுத்தல், கடலோர மற்றும் கரையோர அலகினை பலப்படுத்தல் மற்றும் இந்தியாவுடனான மீன்பிடி பிரச்சனையைத் தீர்த்தல், மீனவ மக்களுக்கு முறையான வங்கி மற்றும் காப்புறுதி திட்டத்தை அறிமுகப்படுத்தல், கடல்சார் பல்கலைக் கழகத்தைப் பயன்படுத்தி இளைஞர்களுக்கு மீன்பிடித் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ பயிற்சி வேலைத் திட்டம் போன்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றப் படவில்லை, அத்துடன் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் திட்டமிட்டவாறு பயன்படுத்த வில்லை. | காரணமாக இந்த நிலை மோசமடைந்தது. அத்துடன் , அமைச்சின் கட்டுநிதியில் தேசிய நீர்வாழின செய்கை அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் கோரப்பட்ட கட்டுநிதி திறைசேறியிலிருந்து கிடைக்கவில்லை. எனவே அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்குரிய ஒதுக்கீட்டில் திட்டமிட்டவாறு பயன்படுத்த முடியவில்லை | |

### 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் செலவின தலைப்பு 3க்கு மற்றும் மூலதன செலவின தலைப்பு 4க்கு உட்பட செலவின தலைப்பு 7க்கு வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 2,930,000 விலிருந்து ஆரம்ப ஒதுக்கீட்டில் ரூபா 400,000 | தேய்மானம் குறைவடைதல் மற்றும் தேய்மான வீதம் உயர்வதுடன் வெளிநாட்டு பயணத்தின் மீதான கட்டுப்பாடு, கட்டுநிதி பெறுவதில் பிரச்சனையால் பயிற்சி | சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேறு செலவின விடயத்துக்கு மாற்றிய பின் ரூபா 2,530,000 மொத்த நிகர ஒதுக்கீட்டு மீதியாக இருந்தது. | பாடநெறிகள் மட்டுப்படுத்தப்படல் மற்றும் இயந்திர பராமரிப்பு செலவும் ஏற்படாமையால் ஒதுக்கீடு மீதமாகியது. | |
| (ஆ) | மீண்டுவரும் செலவின தலைப்பு 8க்கு மற்றும் மூலதன செலவின தலைப்பு 2க்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 56,050,000 ஆரம்ப ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 20,160,300 வேறு செலவுத் தலைப்புக்கு மாற்றிய பின் ரூபா 35,889,700 நிகர ஒதுக்கீட்டில் ரூபா 33,409,351 பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு அமைச்சரவை அமைச்சுக்கு மாற்றப்பட்டபோது கணக்கியல் விடயத்தில் தாமதம் மற்றும் கட்டுநிதி பெறுவதில் கட்டுப்பாடு நிலவியதால் ஒதுக்கீட்டில் மீதி ஏற்பட்டது. மேலும் பங்களிப்புகள் மற்றும் பங்களிப்புகளின் கொடுப்பனவுகள் நிறுத்துதல் மற்றும் வெளிநாட்டுக் கடன் பெறுவதில் கட்டுப்பாடு காரணமாக செயற்றிட்ட நடவடிக்கை நிறுத்தப்பட்டதால் ஒதுக்கீடு மீதமானது. | சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.3 பொறுப்புகள் மற்றும் கடமைகளை ஏற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நி.பி 94(1) மாற்றாக செயற்பாட்டு செலவு விடயத்துக்கு வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டு மீதியைத் தாண்டி ரூபா 40,987,670 கடனை எட்டியிருந்ததுடன், அபிவிருத்தி செலவு விடயம் 2க்கு வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டை மீறி ரூபா 353,778,496 கடனை எட்டியிருந்தது. இதற்கமைய மொத்தமாக ரூபா 394,766,166 ஒதுக்கீட்டை மீறி கடனை எட்டியிருந்தது. | 2022ஆம் ஆண்டுக்குத் தேவையான ஒதுக்கீட்டின் அளவைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட செலவின மதிப்பீட்டில் தொடர்புடைய ஆண்டுக்குத் தேவையான மேற்குறித்த ஒதுக்கீட்டுத் தொகை வரவு செலவு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும் அமைச்சுக்கு குறைந்த அளவே நிதி கிடைத்தது. அமைச்சின் ஒதுக்கீடு கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தப்பட்டாலும, செலவிட்ட செலவுக்கு போதிய ஒதுக்கீடு கிடைக்காமையால் ஒதுக்கீட்டுக்கு மீறி கடனை சுமக்க வேண்டியிருந்தது. | கடன் ஒருபோதும் நிதி ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக்கு அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்று அறிக்கையில் இணைப்பு (iii) இல் செயற்பாட்டு வேலைத் திட்டத்துக்கு மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்குரிய 2022 திசம்பர் 31க்கு கடன் மீதி ரூபா 1,165,662,699 ஆக இருந்ததுடன், திறைசேரி கணணி அச்சு SA 92 அறிக்கைக்கு அமைய திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட கடன் மீதி ரூபா 740,916,331 ஆகும். இதற்கமைய அமைச்சு கடன் விபரம் மற்றும் திறைசேரி கடன் விபரத்துடன் ரூபா 424,746,368 வேறுபாடு காணப்பட்டதுடன் வேறுபாட்டுக்கான | SA 92 அறிக்கைக்கு உள்ளடக்கப்பட்ட செலவுத் தலைப்புக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு வரை மட்டுமே. நிதி நிலை அறிக்கையின் இணைப்பு iii இன் அமைச்சின் சகல கடன்களும் உள்ளடக்கப்பட்டதே இந்த வேறுபாட்டுக்கு | வருடாந்த மதிப்பீடுகளில் பண ஒதுக்கீடு இருக்கும்போது மட்டும் அமைச்சினால் வேலை, சேவை அல்லது வழங்கலுக்கு செலவுக்கு அல்லது பொறுப்புக்கு அல்லது கடமைக்கு மேற்கொள்ள வேண்டும். |

காரணத்தையும் கண்டு பிடிக்க முடியவில்லை. காரணம். இதற்கமைய கடற்றொழில் அமைச்சினால் திறைசேரிக்கு அறிக்கை யிடப்படாத ரூபா 424,746,368 பெறுமதியுடைய கடன் வந்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | | கடற்றொழில் அமைச்சின் 2022ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் மூலம் பயனுள்ள 9 முன்னுரிமை பணிகள் அறிமுகப்படுத்திய போதிலும் பின்வரும் பணிகள் திருப்திகரமாக நிறைவேற்றப்படவில்லை | | |
| | (i) | கரையோர பிரதேசங்களில் மீன் குடித் தொகையை அதிகரிப்பதற்காக விஞ்ஞான ரீதியிலான முறையை அறிமுகப்படுத்தல் | மீன் குடித் தொகையை அதிகரிப்பதற்காக மீன் இனப் பெருக்க நிலையம் அமைப்பதில் தாமதம் | அறிமுகப்படுத்தப்பட்ட பயனுள்ள பணிகள் அடுத்த ஆண்டு செயற்றிட்டத்தில் சேர்ப்பதில் நடவடிக்கை வேண்டும் |
| | (ii) | சர்வதேச பிரதேசத்தில் மீன் பிடிக்கும் நடவடிக்கையை மேம்படுத்துவதற்கு தேசிய நிறுவனங்களுக்கு வாய்ப்பளித்தல் . | பல்தின படகு பதிவு கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. | |
| | (iii) | ரின்மீன் தொழிற் சாலைகளை மேம்படுத்த தனியார் நிறுவனங்களை ஊக்கப்படுத்தல் | ரின்மீன் தொழிற்சாலைகள் 15இன் மூலம் உள்ளூர் சந்தைக்கு ரின்மீன் வழங்கப்படுகிறது. | |
| | (iv) | கடல்சார் பல்கலை கழகத்தைப் பயன்படுத்தி இளைஞர்களுக்கு மீன்பிடித் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ பயிற்சி வேலைத் திட்டங்களை செயற்படுத்தல். | மீன்பிடி நடவடிக்கை மற்றும் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி வேலைத் திட்டங்கள் கட்டுநிதி கிடைக்காமையால் செயற்படுத்த முடியவில்லை | |

### 3.2 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|
| அலங்கார மீன், நன்னீர் மீன், இறால் செய்கையிடல் மற்றும் மீன்பிடித் | கடற்றொழில் அமைச்சு | இராஜாங்க இணையதளத்தை தற்போது முழுமையாக நிர்மாணித்து |

| | | |
|---|---|---|
| துறைமுக அபிவிருத்தி, பல்தின மீன்பிடி நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் பொறுப்புகள் மற்றும் தகவல் பரவலுக்கு இணைய தளத்தை உருவாக்க நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு கடற்றொழில் அமைச்சின் இணையதளத்தை உருவாக்கிய அந்த நிறுவனமே இந்த பணியை மேற்கொள்ள வேண்டுமென 2021 மார்ச் 31ஆந் திகதி பரிந்துரைத்து 2021 ஏப்ரல் 06ஆந் திகதி இராஜாங்க அமைச்சின் கொள்முதல் குழுவினால் ரூபா 250,000 க்கு அந்த நிறுவனம் இணையதளத்தை உருவாக்க தீர்மானிக்கப்பட்டது. ரூபா 175,000 அந்த நிறுவனத்துக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. மேலும் கொள்முதல் வழிமுறைக் கோவை 5.4.8 இன் பிரகாரம் செயற்றிறன் பாதுகாப்பு பெறப்பட வேண்டும் என்றாலும் இந்த ஒப்பந்தத்துக்கு செயற்றிறன் பாதுகாப்பு பெற்றிருக்கவில்லாமையால் கொள்முதலின் ஸ்திரத் தன்மையைப் பாதுகாக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இதற்கமைய 2021 ஏபரல் 30ஆந் திகதி கையெழுத்திடப் பட்டிருந்த ஒப்பந்தத்தின் 2வது பந்திக்கு அமைய ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்ட நாள் தொடக்கம் 12 நாட்களுக்குள் இந்த இணைய தளத்தை நிர்மானித்து நிறைவு செய்ய வேண்டுமெனவும் 2022 செப்தம்பர் 30ஆந் திகதி இராஜாங்க அமைச்சு நீக்கப்பட்டாலும் இணைதளம் நிர்மாணிக்கப்படவில்லை. | நீக்கப்பட்டுள்ளதுடன், எதிர்கால கொள்முதல் நடவடிக்கைகளுக்கு செயற்றின் பாதுகாப்பை பெறுவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயற்படுத்த வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

### 4.1. இணைக்கப்பட்ட ஊழியர்கள் உண்மையான ஊழியர்கள் குழு

கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய கடற்றொழில் அமைச்சின் கீழ் 2022 திசம்பர் 31ஆந் திகதிக்கு இணைக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை 179ஆக இருந்ததுடன் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 152ஆகும். இதற்கமைய மீளாய்வு வருட இறுதிக்கு ஊழியர் வெற்றிடம் 46 ஆகும். அத்துடன் இரண்டாம் நிலை பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 19 ஆகும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) | பணிப்பாளர், உள்ளக கணக்காய்வாளர், பொறியியலாளர், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் ஆகிய சிரேஷ்ட மட்ட பதவிகள் 04 இன் வெற்றிடத்துக்கு பதில் அலுவலர்கள் இருந்ததுடன் அமைச்சின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்தது. | சிரேஷ்ட மட்ட பதவி 03 க்கு வெற்றிடங்கள் இருந்தாலும், அந்த வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு பதில் அலுவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளதால் கடமைகளை மேற்கொள்வதற்கு சிக்கல் எதுவும் இதுவரை ஏற்படவில்லை. | சிரேஷ்ட மட்ட பதவி வெற்றிடத்தை முழுமையாக நிரப்ப வேண்டும் . |
| (ஆ) | 2018 ஜனவரி 24ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வள திட்டம் முறையாக மேற்கொள்ளப்பட வில்லை. அத்துடன் மேற்குறித்த சுற்றறிக்கையில் 6.5ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டம் முறையாக மேற்கொள்ளல், திறன் அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்தல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பாக சிரேஷ்ட அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. | 2018 ஜனவரி 24ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வள திட்டம் முறையாக தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்த சுற்றறிக்கையில் 6.5ஆம் பந்தியின் பிரகாரம் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுள்ளதுடன் அந்த அதிகாரி வெளி நாடு சென்றுள்ளதால் வேறு அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 ஜனவரி 24ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். , |
| (இ) | நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2020 திசம்பபர் 04ஆந் திகதிய DMS/SM/16ஆம் இலக்க கடிதத்துக்கு அமைய, நிலவும் இராஜாங்க அமைச்சுக்கு அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கை 10ஆகவும் அனுமதிக்கப்பட்ட பதவியணியினர்கள் தொடர்பில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமாயின், அதற்கு முகாமைத்துவ சேவை பணிப்பாளரின் முன் அனுமதி பெற வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், கடற்றொழில் இராஜாங்க அமைச்சு நீக்கப்பட்ட 2022 செப்தம்பர் 30ஆந் திகதியான அபிவிருத்தி அபிவிருத்தி 54 பேருக்கு 2022 மார்ச் முதல் நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் ரூபா 19,654,380 வான சம்பளம் மற்றும் ஊதிய ரீதியாக கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்கு முகாமைத்துவ சேவை பணிப்பாளர் | கடற்றொழில் அமைச்சின் அனுமதிக்கப்பட்ட செயற் குழுவில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு 2022 ஒக்தோபர் 05 ஆந் திகதி கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன், 2023 மார்ச் 17ஆந் திகதி செயற்குழு அனுமதி கிடைத்துள்ளது. சம்பளம் மற்றும் ஊதிய ரீதியாக கொடுப்பனவுக்கு 130 செலவு விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்ட செயற் குழு தொடர்பாக யாதேனும் திருத்தங்கள் செய்யும் சந்தர்ப்பத்தில் அதற்கு முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் முன் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நாயகத்தின் முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

**(இ)** இராஜாங்க அமைச்சரின் தனிப்பட்ட செயற்குழு, இராஜாங்க அமைச்சின் செயற்குழு மற்றும் பிற நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்கள் தொடர்பாக கணக்காய்வின்பொது பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) 2010 மேயி 14ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் வழங்கப்பட்ட ஜனாதிபதி அலுவலகத்தின் சுற்றறிக்கையில் 2.2ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரின் அலுவலக பணிக்கமர்த்தப்பட்ட உதவிப் பணியாளர்கள் இயலுமான வரை அரச அலுவலர்களிடமிருந்து தேர்ந்தெடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதற்கு மாறாக இராஜாங்க அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரின் கோரிக்கையின் பேரில் 17பேர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் அரச அலுவலர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்றாலும் கௌரவ இராஜாங்க அமைச்சரின் கோரிக்கையின் பேரில் செயற்குழு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. . ,| 2010 மேயி 14ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் வழங்கப்பட்ட ஜனாதிபதி அலுவலகத்தின் சுற்றறிக்கையில் 2.2ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல வேண்டும். |
| (ii) நி.பி 201 (2)க்கு மாறாக அமைச்சரின் அலுவலகத்தின் தேவைக்கேற்ற உதவி செயற்குழுவுக்கு வருகை மற்றும் வெளிச் செல்ல கையொப்பமிடும் ஆவணம் பராமரிக்காத போதும் சம்பளம் செலுத்தல், குறைந்த சம்பளம் செலுத்தல் அல்லது விடுமுறை தொடர்பான விபரம் எதுவும் இல்லாமை, மொத்த காலப் பகுதிக்கும் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய 2022 ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப் பகுதிக்கு 22 அலுவலர்களுக்கு ரூபா 4,552,850 சம்பளம் வழங்கியது துல்லியமாக உறுதி செய்யப்படவில்லை. | இந்த அலுவலர்களுக்கு உள்ள பணியின் தன்மைக்கு அமைய பொறுத்து சேவைக்கு அறிக்கைப்படுத்தும் ளர்வான கொள்கைக்கு சேவையில் ஈடுபடுத்தல் | நி.பி 201 (2)இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |